# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

11th FEBRUARY 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 66




## விலகுவாரா பொன்சேகா?

03



# ஜனாதிபதி தேர்தலா? நாடாளுமன்றத் தேர்தலா?

## ஏப்ரலில் தீர்மானம்

முதலில் ஜனாதிபதி தேர்தல்தான் இடம்பெறும் என்று பலரால் ஊகங்கள் தெரிவிக்கப்படுகின்றபோதிலும் உண்மையில் முதலில் இடம்பெறப்போவது ஜனாதிபதி தேர்தலா இல்லை நாடாளுமன்றத் தேர்தலா என்ற தீர்மானம் ஏப்ரல் மாதம்தான் எடுக்கப்படும் என்று ஜனாதிபதி வட்டாரம் தெரிவிக்கிறது.

அரசமைப்பின்படி இந்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடத்தப்பட வேண்டும். ஆனால்,அந்தத் தேர்தலில் ஜனாதிபதி வெற்றிபெறக்கூடிய வாய்ப்பில்லை என்று கருதும் அரச எம்பிக்கள் பலர் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதே உகந்தத்து என எண்ணுகிறார்கள். நாடாளுமன்றத் தேர்தலில்

02



## அனுராவல் வந்த வினை

ஜேவிபி தலைவர் அனுரகுமார திஸநாயக்கவின் இந்திய விஜயம் பலரை

02



# மோடியை சந்திக்கும் தமிழரசு கட்சி

தமிழரசு கட்சியின் புதிய தலைவராக எஸ்.சிறிதரன் நியமிக்கப்பட்டதன் பின் அவரது தலைமையிலான குழுவினர் இந்திய பிரதமர் நரேந்திர மோடியைச் சந்திக்கவுள்ளனர்.

அதற்காக மேற்கொள்ளப்பட்ட முயற்சி வெற்றியளித்துள்ளது என்றும் விரைவில் இந்தக் குழு இந்திய தலைநகர் புது டில்லிக்கு சென்று மோடியைச் சந்திக்கும் என்றும் தமிழரசு கட்சி வட்டாரம் தெரிவிக்கிறது.

# இரண்டு தேர்தல்களுக்கும் ரூ.2 ஆயிரம் கோடி

இந்த வருடம் இடம்பெறவுள்ள ஜனாதிபதி மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்கள் இரண்டினதும் செலவுக்கு 2 ஆயிரம் கோடி ரூபா தேவைப்படும் என்று தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மேற்படி இரண்டு தேர்தல்களையும் ஆயிரம் கோடி ரூபா செலவில் நடத்த வேண்டும் என்று அமைச்சரவையில் யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் பந்துல குணவர்தன ஏற்கனவே கூறி இருந்தார்.

இது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் பணிப்பாளர் நாயகம் சமன் சிறி ரத்நாயக்கவிடம் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இந்த வருடம் இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலுக்கு ஆயிரம் கோடி ரூபா தேவை என்று நிதி அமைச்சிடம் எழுத்து மூலம் கோரிக்கை விடப்பட்டுள்ளதாகக் கூறிய அவர் 2025 இல் இடம்பெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தலுக்கும் ஆயிரம் கோடி ரூபா தேவைப்படும் என்று மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது என்று சொன்னார்.




புது சுடர்
www.puthusudar.lk
2024 FEBRUARY 11 - SUNDAY

# டயானாவின் கஞ்சா..!!!

ஒருவர் கஷ்டத்தில் சிக்கினால் அவரை அந்தக் கஷ்டத்தில் இருந்து காப்பாற்றுவதற்காக பலரும் பல்வகையான யோசனைகளை வழங்குவது வழமை.

அவற்றுள் நல்ல-சரியான யோசனைகளும் இருக்கும்பிழையான-நடைமுறைக்கு ஒத்துவராத யோசனைகளும் இருக்கும்.

அப்படித்தான் இப்போது இலங்கையின் நிலைமையும்.நாடு அப்போது-கோத்தாவின் ஆட்சியில் பள்ளத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தபோது அதைக் காப்பாற்றுவதற்கு பலர் நல்ல யோசனைகளை முன்வைத்தனர்.

அவற்றையெல்லாம் தட்டிக்கழித்துவிட்டு பிழையானவர்கள் வழங்கிய பிழையான யோசனைகளை ஏற்றார்-நடைமுறைப்படுத்தினார்-நாட்டை படுகுழிக்குள் தள்ளினார்.இறுதியில் பதவியை விட்டு ஓடினார்.அடுத்தவர் நாட்டை பாரமேற்றார்.

இப்போதும் நாடு நிமிரவில்லை. இருந்தும்,கோத்தாவின் ஆட்சியில் வழங்கிய அதே பிழையான யோசனைகள் மட்டும் இன்னும் நிற்கவில்லை.

அவற்றுள் ஒன்றுதான் இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவின் கஞ்சா யோசனை.டொலரைப் பெற்றுக்கொள்வதற்கு அவரிடம் இருக்கும் ஒரேயொரு யோசனை இந்த கஞ்சா யோசனைதான்.கோத்தாவின் ஆட்சியில் இருந்தே இதை அவர் சொல்லி வருகிறார். அதாவது,நாடு ஓரளவு நல்ல நிலையில் இருந்தபோதே.

நாடு சிக்கலில் வீழ்ந்ததும் அந்த யோசனைக்கு மேலும் அழுத்தம் கொடுக்கத் தொடங்கினார்.ரணிலிடம் எடுத்துக் கூறினார்.

பொருளாதார நிபுணர்-அறிவாளி என்றெல்லாம் சொல்லப்படுகின்ற-நம்பப்படுகின்ற அவரும் அந்த யோசனையை ஏற்றார்2023ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்துக்குள் கொண்டுவந்துவிட்டார்.

கஞ்சாவை வளர்த்து ஏற்றுமதி செய்தால் டொலரை ஈட்ட முடியும்.வைத்திய தேவைக்காக உலகில் கஞ்சாவுக்கு அதிக கிராக்கி இருக்கிறது என்பதுதான் டயானாவின் வாதம்.

அவரது வாதம் பிழை என்றும் இதற்கு பின்னால் பாரிய சதி ஒன்றுள்ளது என்றும் அவரிடம் எடுத்துக்கூறினாலும்கூட அவர் அதை ஏற்கத் தயாரில்லை.

சில நாடுகளில் ஒருசில நோய்களுக்கு மருந்து தயாரிப்பதற்காக ஓரளவு கஞ்சா சேர்க்கப்படுவது உண்மைதான். ஆனால்,பாரிய அளவில் அல்ல.சொற்ப அளவில்.அதனால் பாரிய கிராக்கி அதற்கு இல்லை.

உலகில் கஞ்சா வளர்க்கும் மிகப்பெரிய நிறுவனங்கள் 31 உள்ளன.கனடா போன்ற நாடுகளில்தான் பாரிய அளவில் வளர்கின்றன.

அதிலும் அல்டியா என்ற நிறுவனம் பெரிய நிறுவனம்.2019 இல் அந்நிறுவனத்துக்கு 731 மில்லியன் டொலர் நஷ்டம்.அப்படி இருக்கும்போது நாம் கஞ்சா வளர்த்து சாதிக்க முடியுமா?

அந்த நாடுகள் இறக்குமதி செய்யும் அளவுக்கு பாரிய தேவை கஞ்சாவுக்கு இல்லை.எமது நாட்டில் கூட ஆயுர்வேத மருந்து தேவைக்காக ஓரளவு கஞ்சா பயன்படுத்தப்படுகிறது.அதற்காக கேரளாவில் இருந்து இறக்குமதி செய்யப்படுகிறது.

உண்மை இப்படி இருக்கும்போது கஞ்சா வளர்ப்பில் அதிக அக்கறை காட்டுகிறார் டயானா.இதற்கு பின்னால் உள்ள ஆபத்தைப் புரியாமல்.

இது ஒரு சர்வதேச சதி.சிகரெட் கம்பனிகளின் சதி.உலகில் தற்போது ஒப்பீட்டளவில் சிகரெட் பாவனை குறைந்துகொண்டு போவதால் அதற்கு மாற்றீடாக கஞ்சாவை புகுத்துவதற்கு முயற்சி செய்கின்றன அந்தக் கம்பனிகள். உலகின் பல நாடுகளில் அந்த வேலைத் திட்டத்தைத் தொடங்கிவிட்டார்கள்.

அதற்கு அவர்கள் துருப்புச் சீட்டாகக் கையில் எடுத்திருப்பது அந்த நாடுகளில் ஏற்பட்டிருக்கும் பொருளாதார வீழ்ச்சியை.

அந்த வீழ்ச்சியை சரி செய்வதற்கு கஞ்சாவை வளர்த்து ஏற்றுமதி செய்தால் அதிக டொலரை ஈட்டலாம் என்றொரு புரளியைக் கிளப்பிவிட்டுள்ளனர்.

ஆரம்பத்தில் ஒரு சரத்துக்காக கொஞ்சம் கஞ்சாவை வாங்கிக்கொள்வார்கள்.பிறகு அதை இலங்கையிலேயே விற்பதற்கு வழி செய்வார்கள்.அதாவது அவர்களே இங்கு கம்பனியைத் திறந்து முதலில் சுற்றுலா பயணிகளின் தேவைக்கு மட்டும் என்று சொல்லி விற்பார்கள்.பிறகு எல்லோரும் பாவிக்கலாம் என்ற நிலையை உருவாக்குவார்கள்.

அதற்கு ஏற்ப எமது அரசியல் தலைவர்களை கைக்குள் போட்டுக்கொண்டு சட்டத்தை மாற்றுவார்கள்.இதுதான் இப்போது லெபனானிலும் தாய்லாந்திலும் நடக்கிறது.

அங்கும் அந்நாட்டின் பொருளாதார வீழ்ச்சியை கையில் எடுத்துக்கொண்டுதான் கஞ்சா வளர்ப்புத் திட்டத்தை முன்னெடுத்தார்கள்.ஏற்றுமதிக்கு மட்டும் என்று கூறி.

இன்று அங்கு நிலைமை வேறு.எல்லா இடங்களிலும் கஞ்ச விற்பனைக்குண்டு. வெளிப்படையாகவே புகைக்கலாம்.

இதனால் தாய்லாந்து நீதிமன்றில் வைத்தியர்கள் வழக்குத் தாக்கல் செய்துள்ளனர்.கஞ்சாவை மீண்டும் போதைப்பொருளாக அறிவிக்கக் கோரி.அந்தளவுக்கு அங்கு நிலைமை மோசமாகிவிட்டது.

கஞ்சா வளர்ப்புக்கு அனுமதி கொடுத்தால் அதுபோன்ற நிலைமைதான் எமது நாட்டிலும் ஏற்படும்.ஏற்கனவே போதைப் பொருள் பாவனையால் பெரும் தலையிடியை எமது நாடு எதிர்நோக்கியுள்ளது. இந்த நிலையில்,வெளிப்படையாக கஞ்சா பாவனையும் அதிகரித்தால் நாடு அவ்வளவுதான்.

ஆனால்,அதைப்பற்றியெல்லாம் டயானாவுக்குக் கவலை இல்லை. ஏனென்றால் நாட்டின் முன்னேற்றத்துடன் கலாசாரத்தையும் சமயத்தையும் கலக்கக்கூடாது என்ற நிலைப்பாட்டில் உள்ளார் அவர்.

பொருளாதாரத்தை முன்னேற்றுவதற்காக பாலியல் தொழிலை சட்டபூர்வமாக்க வேண்டும் என்று கூறி வருபவர்.எப்படியாவது பணம் கிடைத்தால் சரி என்பதுதான் அவரின் நிலைப்பாடு.

முதலில் இப்படியானவர்களிடம் இருந்து-இப்படிப்பட்ட சிந்தனைகளிடம் இருந்து நாட்டைக் காப்பாற்ற வேண்டும்.இல்லாவிட்டால் நாடு பெரும் சீரழிவுக்குள் வீழ்வதைத் தடுக்க முடியாமல் போய்விடும்.

# "கேட் வாக் 2024"





சவூதி அரேபிய இராச்சியத்தின் இலங்கைக் குடியரசின் அதிமேதகு தூதுவர் திரு காலித் பின் ஹமூத் அல்கஹ்தானி அவர்கள் "கேட் வாக் 2024" நிகழ்வை 10 பெப்ரவரி 2024 சனிக்கிழமை காலை கொழும்பில் உள்ள புயடடந குயஉந உழவநட இல் நடத்தினார்.

2023 ஜூன் 12 அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச அரேபிய சிறுத்தை நாள், சவூதி அரேபிய இராச்சியம் சமர்ப்பித்த "சர்வதேச அரேபிய சிறுத்தை நாள்" என்ற தீர்மானத்தை 30 க்கும் மேற்பட்ட நாடுகளின் இணை அனுசரணையுடன் ஒருமனதாக நிறைவேற்றியது.

அரேபிய சிறுத்தை பெரிய பூனைகளின் (சிங்கம், பாந்தெரா டைகிரிஸ், மலை சிங்கம், ஜாகுவார், சிறுத்தை, புலி, பனிச்சிறுத்தை) மிகவும் அழிந்து வரும் இனங்களில் ஒன்றாகவும், வனவிலங்குகள் மற்றும் உயிரியல் பன்முகத்தன்மையை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கவும் சவுதி அரேபியா உட்பட அரேபிய சிறுத்தையின் தாயகமாக கருதப்படும் நாடுகளில், அதன் உயிர்வாழ்வதற்கு பங்களிக்கும் பல்வேறு முயற்சிகள் மூலம் அதைப் பாதுகாப்பதில் கவனம் செலுத்துகிறது.

இந்த நிகழ்வில் காலி முகத்திடல் கடற்கரையில் நடைபயணம் இடம்பெற்றதுடன் கொழும்பின் சுற்றுலாத்தலங்களை முன்னிலைப்படுத்தியது.

இந்நிகழ்வில் சிரேஷ்ட அமைச்சர்கள், அரச அதிகாரிகள், இலங்கைக் குடியரசின் அங்கீகாரம் பெற்ற அரபு நாடுகளின் தூதரகத் தலைவர்கள் மற்றும் பல முக்கிய ஊடகவியலாளர்கள், தூதரக அதிகாரிகள் மற்றும் அவர்களது குடும்பத்தினர் கலந்துகொண்டனர்.

## அனுரவால்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

கலக்கமடையச் செய்துள்ளது. அவரைத் தொடர்ந்து பல அரசியல் தலைவர்கள் இந்தியா செல்வதற்கு முயற்சி செய்து வருவதை அவதானிக்க முடிகிறது.

அந்த வகையில் எதிர்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவும் முயற்சி செய்து வருகிறார்.சிறிலங்கா சுதந்திர கட்சியின் தலைவர் மைத்திரிபால சிறிசேனவும் முயற்சி செய்கிறார்.

மைத்திரியின் முயற்சி இப்போது கைகூடியுள்ளது.அவர் விரைவில் இந்தியா செல்லவுள்ளார் என்று சு.க தகவல்கள் தெரிவிக்கின்றன.

## ஜனாதிபதி...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

அரசு வெற்றிபெறாவிட்டாலும் எதிர்க்கட்சி எம்பிக்களை விலைக்கு வாங்கி நாடாளுமன்ற ஆட்சியை அமைக்க முடியும். அதை வைத்து ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெறுவதற்கான வாய்ப்பை பெறலாம் என்று இவர்கள் கூறுகிறார்கள்.

ஆகவேதான், நாடாளுமன்றத் தேர்தலை முதலில் நடத்துமாறு இவர்கள் ஜனாதிபதியைச் சந்தித்து கோரவுள்ளார்கள்.

இருப்பினும்,எந்தத் தேர்தலை முதலில் நடத்துவது என்ற தீர்மானத்தை ஜனாதிபதி ஏப்ரல் மாதம் எடுப்பதற்கு முடிவெடுத்துள்ளார். என்று ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் கூறுகின்றன.





# ஐக்கிய மக்கள் சக்தியில் இருந்து விலகுவாரா பொன்சேகா?

**எமது கட்சியைச் சேர்ந்த பலர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசி இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன்.இது கட்சித் தலைவருக்கும் தெரியும்செயலாளருக்கும் தெரியும்.**

கேள்வி : முன்னாள் இராணுவ தளபதி தயா ரத்நாயக்க ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தமை தொடர்பில் நீங்கள் எதிர்ப்பு தெரிவிப்பதன் காரணம் என்ன?

கேள்வி : உங்களுக்கு எதிரான யுத்த குற்றச்சாட்டு நீதிமன்றில் தயா சாட்சிகளை தொகுத்தமையா அவரை நீங்கள் எதிர்ப்பதற்கு காரணம் ?

கேள்வி : குமார வெல்கமகே,சம்பிக்க ரணவக்க ஆகியோர் கட்சியை விட்டு வெளியேறிவிட்டார்கள்.ராஜித சேனாரத்ன வெளியேறும் நிலையில் உள்ளார்.இதற்கு காரணம் என்ன?

கேள்வி : ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த பலர் அரசுடன் இணைவார்கள் என்று சொல்லப்படுகிறது.ஜனாதிபதி தரப்பு உங்களுடனும் பேசியதா ?

கேள்வி : அரச தரப்பில் இருந்தோ,ஐக்கிய தேசிய கட்சியில் இருந்தோ உங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் இணைவீர்களா?

கேள்வி : ஐக்கிய மக்கள் சக்தியைத் தவிர பொருத்தமான இடம் ஒன்று இருப்பதாக நீங்கள் உணருகிறீர்களா?

கேள்வி : ஜேவிபி தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?

**இவ்வாறு பல கேள்விகளுக்கு பதில் வழங்கினார் நாடாளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா, அவரது முழுமையான பேட்டி கீழே.**

**கேள்வி : முன்னாள் இராணுவ தளபதி தயா ரத்நாயக்க ஐக்கிய மக்கள் சக்தியுடன் இணைந்தமை தொடர்பில் நீங்கள் எதிர்ப்பு தெரிவிப்பதன் காரணம் என்ன?**

பதில் : நான் இந்த கட்சியின் தவிசாளர். ஆனால்,தயா ரத்நாயக்கவை கட்சிக்குள் இணைப்பது தொடர்பில் என்னுடன் கட்சியின் தலைவர் கலந்தாலோசிக்கவில்லை.அவரை இணைத்துக்கொண்ட செய்தியை நான் பேஸ்புக்கில்தான் அறிந்துகொண்டேன்.

அவருக்கு சில பொறுப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன.அவரை இணைத்துக்கொண்டமையை நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன்.தயா சர்ச்சைக்குரிய ஒருவர்.

அவர் பதவியில் இருக்கும்போதே கோத்தாவுடன் சேர்ந்து அரசியல் செய்தவர்.

இதுபற்றி சஜித்திடன் தொலைபேசி மூலம் கேட்டபோது தயா இராணுவத்தில் இருக்கும்போது நீங்கள் பதவிகள் கொடுத்து உங்களோடு சேர்ந்து வேலை செய்தவர் என்று கூறினார்.

அதற்கு நான் அவருக்கு விளக்கம் கொடுத்தேன்.தயாவின் பின்னணி மோசமானது.ஒருவரை கட்சிக்குள் சேர்க்கும்போது அவரது கடந்த காலத்தைத் தேடிப் பார்க்க வேண்டும்.

அவரது செயற்பாடு காரணமாகவே நான் அவரை யுத்தத்தில் சேர்க்கவில்லை.அவரை ஓரங்கட்டி வைத்திருந்தேன்.

**கேள்வி : உங்களுக்கு எதிரான யுத்த குற்றச்சாட்டு நீதிமன்றில் தயா சாட்சிகளை தொகுத்தமையா அவரை நீங்கள் எதிர்ப்பதற்கு காரணம் ?**

பதில் : ஆம்.எனக்கு எதிரான சாட்சிகளின் சாராம்சத்தை தொகுத்ததே அவர்தான்.இதனால் இவருக்கு மேலே 166 இராணுவ அதிகாரிகள் இருக்கும்போது இவரை மஹிந்த அரசு இராணுவத்தின் இரண்டாம் நிலைக்கு கொண்டுவந்தது.

பிறகு இராணுவ தளபதியாக நியமிக்கப்பட்டார்.இதனால் அதிகமான இராணுவ அதிகாரிகள் அவர்மீது கோபமாக இருந்தனர்.

எமது கட்சியில் இராணுவ அமைப்பு ஒன்று உள்ளது.அந்த அமைப்பை ஒழுங்குபடுத்தும் இராணுவ அதிகாரிகள் தயாவின் பின்னணியை எடுத்துக்கூறி தயாவை இணைக்க வேண்டாம் என்று கட்சியின் செயலாளர் ரஞ்சித் மதுமபண்டாரவை சந்தித்து கூறினர்.

அதன் பின் எனக்கு தொலைபேசி அழைப்பு எடுத்த ரஞ்ஜித் இதுபற்றி கூறினார்.நீங்கள் இருக்கும் இடத்தில் வந்து சேருவதற்கு தயாவுக்கு வெட்கமில்லையா என்று கேட்டார்.

எவரையாவது சேர்த்து கட்சியை பலப்படுத்த வேண்டும் என்ற நிலைப்பாட்டில் நான் இல்லை.

தயாவும் நானும் ஒரே இடத்தில் இருக்க முடியாது.நான் இருக்கும் இடத்திற்கு வருவதற்கு அவருக்கு வெட்கமில்லாமல் இருக்கலாம்ஃஆனால்,எனக்கு வெட்கமுள்ளது.

**கேள்வி : உங்களது இந்த நிலைப்பாட்டை ஆதரிக்கின்ற எம்பிக்கள் உங்களது கட்சிக்குள் இருக்கிறார்களா?**

பதில் :ஆம்.அதிகமாக உள்ளார்கள்.

**கேள்வி : இது கட்சிக்குள் அதிர்வை ஏற்படுத்தும் அல்லவா?**

பதில் : நிச்சயமாக.. செய்த தவறை நிவர்த்தி செய்ய வேண்டும்.இவ்வாறானவர்களை கட்சியில் இணைப்பதற்கு எதிராக குரல் கொடுப்பவர்களை மிரட்டக்கூடாது.

அவ்வாறு செய்தால் கட்சி உறுப்பினர்கள் அதிருப்தியடைவார்கள்.கட்சி மீதான விசுவாசம் இல்லாமல் போகும்.கட்சி பலவீனமடையும்.கட்சிக்குள் ஒற்றுமை இல்லாமல் போகும்.

இப்படியே போனால் மஹிந்த ராஜபக்ச,கோத்தாபய ராஜபக்ச ,மைத்திரிபால சிறிசேன ஆகியோரையும் கட்சியில் இணைக்கும் நிலை ஏற்படும்.

**கேள்வி : குமார வெல்கமகே,சம்பிக்க ரணவக்க ஆகியோர் கட்சியை விட்டு வெளியேறிவிட்டார்கள். ராஜித சேனாரத்ன வெளியேறும் நிலையில் உள்ளார்.இதற்கு காரணம் என்ன?**

பதில் : அதற்கான உண்மையான காரணம் எனக்குத் தெரியாது.அவர்கள் கட்சிக்குள் வெவ்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்திருக்கலாம்.

கட்சிக்குள் சிலர் எந்தவித செயற்பாடுகளிலும் ஈடுபடாமல் அமைதியாகவும் இருக்கிறார்கள். பிரச்சினைகள் எதுவாக இருந்தாலும் அவை பேசித் தீர்க்கப்பட வேண்டும்.

**கேள்வி : கட்சியை விட்டுச் சென்றவர்களின் பட்டியலில் உங்களது பெயரும் இடம்பெறுமா?**

பதில் : நான் கொள்கையுடன் செயற்படுபவன்.பிழைகளை கண்டால் வாய் திறப்பவன்.ஒரு லட்சத்து 13 ஆயிரம் வாக்குகளை பெற்று நாடாளுமனறதுக்கு வந்துள்ளேன்.அந்த மக்கள் எம்மீது சில எதிர்பார்ப்புகளை வைத்துள்ளனர். அவர்களுக்காக நான் கட்சிக்குள் இருப்பேன்.

**கேள்வி : ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த பலர் அரசுடன் இணைவார்கள் என்று சொல்லப்படுகிறது.ஜனாதிபதி தரப்பு உங்களுடனும் பேசியதா?**

பதில் : ஒருபோதும் நான் அந்தப் பக்கத்துக்குச் செல்லமாட்டேன். ரணில் விக்கிரமசிங்க பல இடங்களில் என்னை சந்தித்து இருக்கிறார். அப்போதெல்லாம் அரசியல்பற்றி பேசவுமில்லைஎன்னை அழைக்கவுமில்லை.

ஆனால், எமது கட்சியைச் சேர்ந்த பலர் ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசி இருக்கிறார்கள் என்பதை நான் அறிவேன்.இது கட்சித் தலைவருக்கும் தெரியும்செயலாளருக்கும் தெரியும்.

ஆனால்,அவர்கள் அரசுடன் இணைவார்களா ,இல்லையா என்று எனக்குத் தெரியாது.

**கேள்வி : அரச தரப்பில் இருந்தோ,ஐக்கிய தேசிய கட்சியில் இருந்தோ உங்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டால் இணைவீர்களா?**

பதில் : எனக்கு வாக்களித்த மக்களை ஏமாற்றிவிட்டு அரசில் இணைவதற்கு எனக்கு விருப்பமில்லை.ஐக்கிய தேசிய கட்சியில் உள்ளவர்கள் எம்மோடு ஒன்றாக அரசியல் செய்தவர்கள்.அரசியல்ரீதியாக நாம் பிரிந்திருந்தாலும்,தனிப்பட்ட முறையில் நாம் உறவு வைத்துள்ளோம்.

**கேள்வி : ஐக்கிய மக்கள் சக்தியைத் தவிர பொருத்தமான இடம் ஒன்று இருப்பதாக நீங்கள் உணருகிறீர்களா?**

பதில் : நாங்கள் ஐக்கிய மக்கள் சக்தியுடன் ஒன்றிணைந்து நிற்கிறோம்.அவர்கள் தொடர்பில் எனக்கு நம்பிக்கை உண்டு. அதனால் இருக்கின்ற இடத்தில் நான் இருப்பேன்.

**கேள்வி : ஜேவிபி தொடர்பில் உங்களது நிலைப்பாடு என்ன?**

பதில் : அவர்களின் அரசியல் வித்தியாசமானது. 2010 ஜனாதிபதி தேர்தலில் என்னை வேட்பாளராக நிறுத்துவதற்காக முதலில் வந்து என்னோடு பேச்சு நடத்தியது ரணில் விக்ரமசிங்க. பிறகு அவர்தான் ஜேவிபியுடன் பேசி அவர்களையும் பேச்சுக்கு அழைத்தார்.

பின்னர் நான் கடற்படை தலைமையகத்தில் சிறை வைக்கப்பட்டிருந்தபோது ஜேவிபியுடன் இணைந்து கொழும்பில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டேன்.வெற்றிபெற்றேன்.

பின்னர் இரண்டு மாதங்களில் ஜேவிபி அவர்களின் வழமையான அரசியல் பயணத்தை முன்னெடுத்தது.நாம் எமது வழியில் சென்றோம். – என்றார்.



# புனித ஹஜ்
# HAJJ 2024
ஹஜ்ஜுக்கான
புதிவுகள் ஆரம்பம்



IATA

36 வருட ஹஜ் உம்றா அனுபவத்துடன் இம்முறை புனித ஹஜ்ஜிற்காக அல்ஹாஜ் சையாப் அன்வர் அவர்களின் கண்காணிப்பில் ஹாஜிகளை அழைத்துச்செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது

**சப்ரா ட்ரவல்ஸ் & டுவர்ஸ்.**

**அஸீஸியா செல்வதில்லை மக்காவில் தங்குவது**

ஹஜ் பெகேஜில் அடங்குபவை
- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- மினாவில் B Category Tent, தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விசா மற்றும் விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சிறப்பான சேவை.

**நீங்கள் எதிர்பாராத நியாய கட்டணம், நிறைவான சேவை**

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

**அல்ஹாஜ் சையாப் அன்வர்**
**0775046995 I 0777667152**
அல்ஹாஜ் ஜாபிர் - 0767007391

## Safra Travels & Tours (Pvt) Ltd
FLG - 4, Dias Place, Gnasinghapura, Colombo -12.
Tel: (0094) 0112 335699 I Fax: 0112335043
E- mail: safra_travels@yahoo.com





BURAQUE TRAVELS

# HAJJ PILGRIMAGE 2024
# புனித ஹஜ்



47 ஆண்டுகால அனுபவமும், முத்த உலமாவும் ஹாஜிகளுக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து ஹஜ் உம்றாவுக்கு வழிகாட்டும் அல்ஹாஜ் மவ்லவி ஏ.எல்.எம்.கலீல் மதனி அவர்களின் நேரடி வழிகாட்டலில் ஹஜ்பயணிக்கும் வாய்ப்பு

நாம் வழங்கும் சேவை
- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

As Sheikh M A M Masooth Ahmed (Hashimi) JP
077 9000 115
(Kattankudy)

As Sheikh M A Ibrahim (Gafoori)
077 42 39 389
(Colombo)

Al Haj Mishab JP
077 400 8485
(Negombo)

நியாய கட்டணம், நிறைவான சேவை, நேர்த்தியான வழிகாட்டல்

மேலதிக விபரங்களுக்கு:
**+94 777 909 377 I +94 777 918 978**

## BURAQUE TRAVELS (PVT) LTD
+94 11 267 8811
Info@buraque.lk
62,Dematagoda Road, Colombo -09 Sri Lanka

In Service
Over 3 Decades

IATA



# ஹஜ்
# HAJJ 2024
வாழ்நாளில்
மறக்கமுடியாத பயணம்



Our Services
- Accommodation in Makkah ( 5 Star Hotel - Clock Tower)
  in Madinah ( 4 Star Hotel )
  in Mina Tent - B Category
- Sri Lankan Meals
- Luxury Ground Transport
- Visa with Insurance and Air Ticket
- Guidance By Ashsaik Suib Deeni

Luxury Package
Short Package



தரமான சேவையுடன்
அஷ்ஷேக் சுஐப் தீனி அவர்களின்
நேரடி வழிகாட்டலில்
புனித ஹஜ்ஜை பூரண திருப்தியுடன்
நிறைவேற்ற காலம் தாழ்த்தாமல் தொடர்புகொள்ளுங்கள்

For further details, contact:
**Alhaj Askar Aunn - 0777 03 15 23**
**Alhaj Aunn - 077 55 42 660**

## The Global Travels & Leisure Pvt Ltd
ஹஜ் உம்றா சேவை நிறுவனம்
No.653, Maradana (Next to Sampath Bank ) Colombo 10
Tel: 0117221876 I 0117221720 E-mail: askar@theglobal.lk



# புனித ஹஜ் 2024

இம்முறை புனித ஹஜ்ஜிற்காக ஹாஜிகளின் நலன் கருதி 3 பெகேஜ்களில் அழைத்துச் செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது.



**PAKAGE -A: 20,95,000/-**
முஅல்லிம் - B

**PAKAGE -B: 16,95,000/-**
முஅல்லிம் - C , Clock Tower

**SORT PAKAGE -B: 18,95,000/-**

நாம் வழங்கும் சேவை
- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

**ரமழான்**
இறுதி 15 நாட்கள்
உம்றா பெகேஜ்:
**749,000/-**

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

மேலதிக விபரங்களுக்கு:
அல்ஹாஜ் மௌலவி பைசல் பின்னூரி - 0777141151
அல்ஹாஜ் மௌலவி ஸகரியா இனாமி - 0777151156

# பின்னூரியா
ஹஜ் உம்றா சேவை நிறுவனம்
**BINNOORIYA HAJJ UMRAH SERVICE**
#204/01, Grandpass Road,Colombo-14. and Asna Super Market, Akurana.

# ஜனாதிபதிக்காக ரகசிய பூஜை



இங்கையை வெற்றிபெறச் செய்வோம் என்ற வேலைத்திட்டம் ஒன்றைத் தொடங்கியுள்ளது அரசு.அதன் அங்குரார்ப்பண நிகழ்ச்சி அனுராதபுரத்தில் இடம்பெற்றது.அதில் பிரதம அதிதியாக மனுஷ நாணயக்கார கலந்துகொண்டார்.

அனுராதபுரம் சல்காது மைதானத்தில் இது இடம்பெற்றது.பிறகு  இரவு நேரம் அபயகிரி விகாரையில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் கலந்துகொண்டார்.

அங்கிருந்து அவர் சென்றது சிறிமஹாபோதி விகாரைக்கு.அங்கு விசேட ரகசிய பூஜை ஒன்று இடம்பெற்றது.அதில் கலந்துகொள்வதற்காகவே சென்றார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்ரமசிங்க வெற்றிபெற வேண்டும் என்று நடத்தப்பட்ட பூஜைதான் அது.

# தமிழில் பேசி அசத்திய சிங்கள அமைச்சர்

நாடாளுமன்றில் தமிழ் மொழி தெரிந்த சிங்கள எம்பிக்கள் ஒரு சிலர் உள்ளார்கள். அவர்களுள் அதிகம் அறியப்பட்டவர் மஹிந்தானந்த அழுத்கமகேதான்.

அவர் பல தடவைகள் நாடாளுமன்றில் தமிழில் உரையாற்றி இருக்கிறார்.

அவரைப்போலவே தமிழில் பேசக்கூடிய இன்னொருவரும் இருக்கிறார்.அவர் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தஸநாயக்க.

அவர் சில நாட்களுக்கு முன் ஒரு நிகழ்வில் தமிழில் பேசி அசத்திய சம்பவம் ஒன்று இடம்பெற்றது. அது இலங்கையில் அல்ல உகண்டாவில்.

உகண்டாவில் இடம்பெற்ற சர்வதேச மாநாட்டில் கலந்துகொள்வதற்காக ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர் சென்றனர்.அவர்களுள் சாமர சம்பத் தசாநாயக்கவும் சென்றார்.

உகண்டாவுக்கான இலங்கைத் தூதுவர் இரவு விருந்தொன்றை ஏற்பாடு செய்திருந்தார்.அதில் தமிழ் நாட்டைச் சேர்ந்த தமிழ் வர்த்தகர்களும் கலந்துகொண்டனர்.

அந்த நிகழ்வில் யாரும் எதிர்பார்த்திராத நிலையில் தமிழில் பேசி அசத்தினார் சாமர சம்பத்.அவர் பேசுவதை சிரித்தவாறு அவதானித்துக்கொண்டிருந்தார் ஜனாதிபதி.



# மஹிந்தவின் 25 வீதம்

*மஹிந்த ராஜபக்சவுக்கு 25 வீத வாக்குகள் நாட்டில் உள்ளன என்று மொட்டு கட்சி இன்னும் நம்புகிறது.அந்த 25 வீதத்தை எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் மொட்டு கட்சி பெற்றுக்கொள்வதாக இருந்தால் அது இன்னொரு ராஜபக்ஸவால்தான் முடியும் என்று கட்சிக்குள் சிலர் பேசத் தொடங்கியுள்ளனர்.*

*அப்படியாயின்-அந்த 25 வீத வாக்குகளை பெறுவதாகியின் நாமல் ராஜபக்ஸவை வேட்பாளராக நிறுத்த வேண்டும் என்று மொட்டுக்குள் சிலர் கூறி வருகின்றனர்.*

*நாமலும் இதே நிலைப்பாட்டில்தான் உள்ளார் என்கிறது உள்ளகத் தகவல்.*

## துப்பறிவாளன்

# நீங்களும் என் பக்கம்



சில நாட்களுக்கு முன் கொழும்பில் நிகழ்வு ஒன்று இடம்பெற்றது.அது சட்டத்தரணிகளின் நிகழ்வு. அதில் ஜனாதிபதி பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

ஜனாதிபதியை சுற்றி நின்ற சட்டத்தரணிகள் தற்போதைய அரசியல்பற்றி ஜனாதிபதியுடன் பேசத் தொடங்கினர்.

ஜனாதிபதி தேர்தலில் கட்சியின் வேட்பாளராக இல்லாமல் பொது வேட்பாளராக வாருங்கள் என்று சில சட்டத்தரணிகள் ஜனாதிபதியிடம் கூறினர்.

அப்போது அங்கு நின்ற ஜேவிபி சட்டத்தரணியான சுனில் வட்டகள முதலில் வருவது எந்தத் தேர்தல் என்று ஜனாதிபதியிடம் கேட்டார்.

"ஜனாதிபதி தேர்தல்தான் என்று உங்கட தலைவர் அனுர கிட்ட சொல்லிட்டேன். உங்க கிட்ட அவர் சொல்லல்லயா..?"" என்று கேட்டார் ஜனாதிபதி.

"அப்படியா ..எங்கட அநுரதான் வெல்வார் ..." என்றார் சுனில்.

சுனிலைப் பார்த்து ஒரு சிரிப்பு சிரித்த ஜனாதிபதி "இன்னும் 6 மாசத்துல நீங்க எல்லோரும் என்ட பக்கம்." என்றார்.

# ஒரு நிமிடத்தில் தீர்வு

அந்த நிகழ்வில் சாமர சம்பத்தும் கிங்ஸ் நெல்சன் எம்பியும்  ஒரு பிரச்சினையை ஜனாதிபதியிடம் கூறினர்.

அது இலங்கை இரத்தின கல் வியாபாரிகள் துனீசியாவுக்கு சென்று வர்த்தகம் செய்வதற்கு விசா வழங்காமையாகும்.

அந்த மாநாட்டுக்கு துனிசியா ஜனாதிபதியும் வந்திருந்தார்.ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அந்நாட்டு ஜனாதிபதியை உடனே சந்தித்து இந்தப் பிரச்சினையைக் கூறினார்.

துனீசிய ஜனாதிபதி அந்த நாட்டின் சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு உடனே அந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைத்தார்.

ஒரு நிமிடத்திலேயே இந்த பிரச்சினை தீரும் என்று கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை.இதனால் அசந்து போனார்கள் இலங்கை அரசியல்வாதிகள்.



# இவரும் ஜனாதிபதி வேட்பாளராம்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் பலர் போட்டியிடவுள்ளனர். பிரதான வேட்பாளர்களுக்கு அப்பால் சில சிறிய வேட்பாளர்களும் களமிறங்குகின்றனர்.

அவர்களுள் ரொஷான் ரணசிங்கவும் ஒருவர்.அமைச்சுப் பதவியில் இருந்து ஜனாதிபதியால் விரட்டப்பட்டவர்.இப்போது புது கட்சி ஒன்றுக்குத் தலைவர்.

மொட்டு கட்சியால் அதிருப்தியடைந்த பலர் இப்போது ரொஷானின் கட்சியில் சேர்கிறார்களாம்.சம்பிக்க ரணவக்க,டலஸ் அழகப்பெரும போன்றவர்களின் கட்சியுடன் கூட்டணி அமைத்துச் செயற்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாம்.

ஐக்கிய மக்கள் சக்தியின் பல எம்பிக்கள் ரொஷானுடன் பேசி வருகிறார்களாம்.இந்த கூட்டணியின்  ஆதரவோடு அடுத்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதுதான் அவரது திட்டமாம்.



# சாதித்து காட்டிய மரைக்கார்



கோத்தாவை விரட்டுவதற்காக நடத்தப்பட்ட போராட்டத்திற்கு பின்னர் பாரிய போராட்டங்கள் எவையும் இடம்பெறவில்லை.

அரசுக்கு எதிராக மீண்டும் ஒரு பாரிய போராட்டத்தை நடத்த வேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தி திட்டமிட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியில் முன்பெல்லாம் போராட்டங்களை ஏற்பாடு செய்தவர்கள் ஹரின் பெர்னாண்டோ.மனுஷ நாணயக்கார போன்றவர்கள்தான்.

அவர்கள் அரசுடன் இணைந்ததும் இனி போராட்டங்களை ஒழுங்குபடுத்த ஐக்கிய மக்கள் சக்திக்குள் ஆளில்லை என்று பேசப்பட்டது.

அதைப் பொய்யாக்குவதற்காக கடந்த வாரம் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை ஐக்கிய மக்கள் சக்தி கொழும்பில் நடத்தியது.

இதை ஏற்பாடு செய்யும் பொறுப்பை சஜித் பிரேமதாச எஸ்.எம்.மறைக்காரிடம் ஒப்படைத்தார்.மரைக்கார் மகவும் வெற்றிகரமாக அதை நடத்திக் காட்டினார்.




# பாதுகாப்பற்ற சூழலில் சட்டவிரோத சிறுவர் பூங்கா

## ரூ.2.5 மில்லியனை பொறுப்பேற்க யாருமில்லை

எம்.எல்.எஸ்.முஹம்மத்
lk.mlsmohamed@gmail.com

தொடர்ந்து அவரிடம் உங்கள் அதிகார சபையின் அனுமதியையும் மீறி எவ்வாறு அவர்களால் பாரிய செலவில் சிறுவர் பூங்காவை நிறுவ முயற்சித்தனர்?இதற்கு எதிராக உங்கள் அதிகார என்ன நடவடிக்கைகளை முன்னெடுத்தது என மேற்படி பணிப்பாளரிடம் கேட்டபோது

“ இதொரு சிக்கலான கேள்வியாகும். பிராந்திய அரசியல் தலையீடுகள் இந்த விடயத்தில் அதிகம் செல்வாக்குப் பெற்றிருந்தன.அந்நேரத்தில் கடமையிலிருந்த அதிகாரிகள் சிலரும் இத்தவறுக்கு காரணமாக இருந்துள்ளனர்.இரத்தினபுரி மாநகர சபை நிர்வாகமும் எமது அங்கீகாரம் தொடர்பில் கவனம் செலுத்த தவறினர்.

எங்களுக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றபோது திட்டம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று மாதங்கள் அளவில் நிறைவு பெற்றிருந்தன.

அப்போது சபரகமுவ மாகாண சுற்றாடல் அதிகார சபையின் உதவிப் பணிப்பாளராகவே நான் கடமையில் இருந்தேன்.சபரகமுவ மாகாண ஆளுநர் அலுவலக அதிகாரிகள் அரச செயற்திட்ட ஒழுங்கு நடைமுறைகளை பின்பற்றத் தவறியமைதான் இத்தவறுக்கு பிரதான காரணம்”, என அவர் விபரிக்கிறார்.

சபரகமுவ மாகாண மத்திய சுற்றாடல் அதிகார சபையின் முன்னாள் பணிப்பாளரிடம் இப்பிரச்சினைக்கான உண்மையான அரசியல் அழுத்தம் என்ன என நாம் வினவினோம்.இதற்கு அவர் பதில் அளிக்கையில்,

“இரத்தினபுரி களுகங்கையை அண்மித்த பகுதியில் நிறுவ முயற்சித்த இரத்தினபுரி சிறுவர் பூங்கா அபிவிருத்தித் திட்டத்திற்கான எமது அங்கீகாரத்தைக் கோரி இரத்தினபுரி மாநகர சபை எமக்கு எழுத்து மூலம் விண்ணப்பித்திருந்தது.

இதற்கிணங்க எமது மதிப்பீட்டுக் குழு உரிய இடத்தை ஆராய்ச்சி செய்ததன் பின்னர் எமது ஆலோசனையை மாநகர சபைக்கு அறிவித்தோம்.








எனினும் சபரகமுவ மாகாண ஆளுநர் மகிபால ஹெரத் இதற்கான அங்கீகாரத்தை வழங்குமாறு எம்மை தொடர்ந்தும் வற்புறுத்தி வந்ததால் எமது தீர்மானத்தை இடைநிறுத்திக்கொள்ள வேண்டி ஏற்பட்டது”,என அவர் தெரிவிக்கிறார்.

“எமது நிலைப்பாட்டையும் மீறி இத்திட்டத்தை இரத்தினபுரி மாநகர சபை ஆரம்பித்த போதிலும் இரத்தினபுரி சிவில் சமூக அமைப்புக்களும் மாநகர சபையின் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் இத்திட்டத்தை முன்னெடுக்க பாரிய எதிர்ப்பை முன்வைத்ததால் இத்திட்டம் அதன் ஆரம்பக் கட்டத்திலேயே கைவிடப்பட்டு விட்டது”, என அவர் மேலும் தெரிவிக்கிறார்.

சபரகமுவ மாகாண சபையின் முன்னாள் ஆளுநர் மஹிபால ஹெரத் அரசியல் அழுத்தங்களை மேற்கொண்டு மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரத்தை பெற முயற்சித்தார் என மேற்படி அதிகார சபையின் முன்னாள் பணிப்பாளர் தெரிவிக்கும் குற்றச்சாட்டு தொடர்பாக மஹிபால ஹெரத்தை தொடர்புகொள்ள முயற்சித்த போதிலும் அவர் அழைப்பிற்கு பதில் அளிக்க முன்வரவில்லை.

எனினும் இது தொடர்பில் அவரின் மக்கள் தொடர்பு அதிகாரியுடன் தொடர்புகொண்டு கேட்டபோது,

“கௌரவ மஹிபால ஹெரத் சபரகமுவ ஆளுநராக பதவி வகித்தபோது பல்வேறு அபிவிருத்தி திட்டங்களை ஆரம்பித்து வெற்றிகரமாக நிறைவு செய்தவர்.

அவர் அரசியல் அழுத்தங்களை பிரயோகித்தார் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.மாகாண ஆளுநர் என்ற முறையில் அவருக்கிருந்த அதிகாரங்களை பயன்படுத்தி சிலபோது அவசர தீர்மானங்களை மேற்கொண்டுள்ளார்.

ஆனால் அரச நிதியை பயன்படுத்தும் போது மாகாண செயலாளர் ஊடாகவே அனைத்தும் முன்னெடுக்கப்பட்டன.இரத்தினபுரி சிறுவர் பூங்கா அபிவிருத்தி திட்டத்தின் இடைநிறுத்தத்திற்கு ஆளுநரை குற்றம் சுமத்த முயற்சிப்பது நியாயம் அற்றது”,என அவர் தெரிவிக்கிறார்.

சிறுவர் அதிகார சபையின் இரத்தினபுரி மாவட்ட உதவிப் பணிப்பாளரிடம் இது தொடர்பாகக் கேட்டபோது

களுகங்கையை அண்மித்து இரத்தினபுரி மாநகர சபையால் அமைக்கப்படவிருந்த மேற்படி சிறுவர் பூங்காவின் அமைவிடம் நேரடியாக களுகங்கைக்கு அண்மித்திருந்ததால் அதன் ஆபத்துக்கள் தொடர்பில் இரத்தினபுரியிலுள்ள பல சிவில் அமைப்புக்கள் எங்களிடம் முறையிட்டனர்.

இதுதொடர்பாக நாமும் ஆராய்ந்து பார்த்தோம்.அதன் பின்னரே இந்த இடத்தில் சிறுவர் பூங்கா அமைப்பது பாதுகாப்பு அற்றது என இரத்தினபுரி மாநகர சபைக்கு அறிவித்தோம் என அவர் குறிப்பிடுகிறார்.

இரத்தினபுரி சிவில் சமூக அமைப்பினர்கள் மாத்திரமின்றி பெற்றோர்கள் மற்றும் இரத்தினபுரி மாவட்ட சர்வமதத் தலைவர்கள் பலரும் மேற்படி இடம் சிறுவர் பூங்கா அமைப்பதற்கு பொருத்தமான இடமல்ல.

எனினும் ஏன் இதற்கென அரசு 2.5 மில்லியன் ரூபா செலவுசெய்து மக்கள் பணத்தை அநியாயம் செய்துள்ளனர் என கேள்வி எழுப்புகின்றனர்.

இதுதொடர்பாக இரத்தினபுரி மாவட்ட சர்வமதக் குழு சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் நிலூகா ஏக்கநாயக்கவையும் சந்தித்து தமது கண்டனத்தை தெரிவித்துள்ளனர்.

மக்கள் வரிப்பணம் மூலம் திரட்டப்பட்ட ரூபா 2.5 மில்லியனை சிறுவர் பூங்கா என்ற பெயரில் பொறுப்பற்ற முறையில் செலவழித்தமை பற்றி இரத்தினபுரி மாநகர சபையின் ஆணையாளர் வீ.அருன என்.பிரேமரத்னவிடம் கேட்டபோது

“ இரத்தினபுரி மாநகரத்தில் சிறுவர் பூங்கா இல்லாமை முக்கிய குறைபாடாக அனைவராலும் அன்று நோக்கப்பட்டது. அதற்கிணங்கவே இதற்குரிய ஆயத்தங்களை அப்போதைய இரத்தினபுரி மாநகர சபை நிர்வாகம் மேற்கொண்டது.எனினும் தேவையான சில ஒழுங்களையும் அறிக்கைகளையும் பெற முன்னரே சிறுவர் பூங்காவை அமைக்க முற்பட்டமைதான் இங்கு முக்கிய தவறாகும்.

சபரகமுவ மாகாண கோப் குழுவிலும் இது பற்றிய விசாரணைகள் கடந்த காலங்களில் இடம்பெற்றுள்ளன. அதற்கிணங்க இந்த இடத்தில் திறந்த உணவகம் ஒன்றையும் மக்கள் ஓய்வு அரங்கம் ஒன்றையும் நிறுவ மாநகர சபை தீர்மானித்துள்ளது.

எனினும் நிதி நெருக்கடிகள் தொடர்வதால் இத்திட்டத்தை விரைவுபடுத்த முடியாமல் உள்ளன” அவர் தெரிவிக்கிறார்.

(தொடரும்)

# இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடிய TikTok




TikTok -இலங்கையின் 76ஆவது சுதந்திர தினத்தை மிகவும் விமர்சையாகக் கொண்டாடி இலங்கையுடனான அதன் இறுக்கமான உறவை மீண்டும் ஒரு தடவை வெளிப்படுத்தியுள்ளது.

டிஜிட்டல் யுகத்தில், TikTok போன்ற தளங்கள் கலாச்சார மையங்களாக உருவாகியுள்ளன, இடைவெளிகளைக் குறைக்கின்றன மற்றும் ஒன்லைனில் ஒற்றுமை உணர்வை வளர்க்கின்றன.

இலங்கை தனது 76வது சுதந்திர தினத்தை நினைவுகூரும் போது, நாட்டின் வளமான பாரம்பரியத்தை கொண்டாடும் வகையில் பன்முகத்தன்மை, உள்ளடக்கம் மற்றும் படைப்பாற்றல் ஆகியவை ஒன்றிணைந்த ஆற்றல்மிக்க கற்றல் தளத்தில் TikTok மையமாக உள்ளது.

அழகான தீவு-தேசம் அதன் கலாச்சார செழுமைக்காக அறியப்படுகிறது மற்றும் TikTok Onlineஇல் பலவிதமான வெளிப்பாடுகளுக்கு உருகும் பாத்திரமாக வேகமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

# Uberஇன் அடங்கா ஆசைகளின் அறிக்கை




கடந்த ஆண்டில் ஊபெர் ஈட்ஸ் (Uber Eats) தளத்தினூடாக நீங்கள் எத்தகைய உணவு ஓர்டர்களை மேற்கொண்டுள்ளீர்கள் என்ற விடயத்தை ஆழமாக அலசி ஆராய்ந்த நாம், இலங்கை மக்கள் எதிலும் காரத்தை விரும்புகின்றனர் என்பதைக் கண்டறிந்துள்ளோம்.

ஊபெர் ஈட்ஸ் செயலியில் (Uber Eats app) கிடைக்கப்பெற்ற உணவு ஓர்டர்களுக்கான மிகவும் அதிக எண்ணிக்கையான விசேட குறிப்பு அறிவுறுத்தல்களை நோக்கும் போது அவை "காரமாக ஆக்கவும்" (make it spicy), "எக்ஸ்ட்ரா காரம்" (extra spicy), மற்றும் "காரம்" (spicy) என அமைந்துள்ளமை இலங்கை மக்கள் காரத்தை - நேசிப்பதை நிரூபித்துள்ளது.

ஊபெர் ஈட்ஸ் அடங்கா ஆசைகளின் அறிக்கை 2023 (Uber Eats Cravings Report 2023) ஆனது நாட்டில் மக்கள் எத்தகைய உணவுகள் மீது அடங்கா ஆசை கொண்டுள்ளனர் என்ற விடயங்களின் சுருக்கமான தொகுப்பாக அமைந்துள்ளதுடன், அவர்கள் மத்தியில் மிகவும் பிரபலமாக காணப்பட்ட உணவு வகைகள் மிகவும் ஆர்வமூட்டும் வெளிப்பாடுகளை எம்முன் கொண்டு வந்துள்ளன.

இலங்கை மக்களின் வாழ்வில் உள்ளார்ந்த அங்கமாக மாறியுள்ள அவர்களின் அபிமானம் பெற்ற உணவு மற்றும் மளிகைப்பொருட்கள் தொடர்பான இச்செயலி, அவர்களுக்கு மிகவும் தேவையான நேரங்களில் சேவையை வழங்கி வருகின்றது.

'பிறந்ததினம்' - என்ற குறிப்பான விநியோக அறிவுறுத்தல்களுடன் ஊபெர் ஈட்ஸில் 8,000 க்கும் மேற்பட்ட ஓர்டர்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

# வங்கிகளின் CIA அமர்வின் தலைவராக நியமனம்



அமானா வங்கியின் பிரதம உள்ளக கணக்காய்வாளரான நுமைர் காசிம், வங்கிகளின் பிரதம உள்ளக கணக்காய்வாளர் அமர்வின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளதாக வங்கி பெருமையுடன் அறிவித்துள்ளது.

வங்கியியல் மற்றும் கணக்காய்வு பிரிவுகளில் நுமைர் கொண்டுள்ள சிறந்த தலைமைத்துவம் மற்றும் சிறப்பு ஆகியவற்றை உறுதி செய்து, அமர்வின் அண்மைய கழக அறிமுக நிகழ்வின்போது இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

உள்ளக கணக்காய்வில் உறுதியான பின்னணிப் பதிவைக் கொண்டுள்ள நுமைர், வங்கியின் பிரதம உள்ளக கணக்காய்வாளராக 2017 ஆம் ஆண்டு முதல் இயங்குகின்றார்.

அதற்கு முன்னதாக இவர் உள்ளக கணக்காய்வு பிரிவின் உதவி பதில் தலைவராகவும், சிரேஷ்ட முகாமையாளராகவும் பணியாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

அமானா வங்கியுடன் இணைந்து கொள்வதற்கு முன்னதாக, அபு தாபி இஸ்லாமிய வங்கியில் உள்ளக செயன்முறை பகுப்பாய்வாளராக பணியாற்றியுள்ளதுடன், அபு தாபி தேசிய வங்கியில் செயற்பாடுகளுக்கான சிரேஷ்ட அதிகாரியாகவும் பணியாற்றிய அனுபவத்தை நுமைர் கொண்டுள்ளார்.

# HNB FINANCEஇற்கு புதிய தலைவர்



ராஜீவ் திஸாநாயக்க 2024 ஜனவரி 8 முதல் HNB FINANCE PLC இன் புதிய தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். 2021 ஆம் ஆண்டு முதல் HNB FINANCE இன் தலைவராக கடமையாற்றிய டில்ஷான் ரொட்ரிகோவிற்குப் பின்னர் ராஜீவ் திஸாநாயக்க அதன் புதிய தலைவராக செயற்பட்டு வருகிறார்.

புதிய தலைவராக நியமிக்கப்பட்ட ராஜீவ் திசாநாயக்க, 2017 ஆம் ஆண்டு முதல் HNB FINANCE இன் பணிப்பாளர் சபை உறுப்பினராக இருந்து வருகிறார்.

இதற்கு முன், தணிக்கை மற்றும் இடர் முகாமைத்துவ பணிப்பாளர் குழுவின் தலைவராகவும் இருந்துள்ளதுடன், இன்று, அவர் மூலோபாய மற்றும் முதலீட்டு மறுஆய்வுக் குழுவின் தலைவராக பணியாற்றி தனது சிறந்த பங்களிப்பை வழங்கி வருகிறார்.

ராஜீவ் திஸாநாயக்க வங்கி மற்றும் மூலதனச் சந்தைகளில் 20 வருடங்களுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டவர். அவர் தற்போது HNB இல் சிறு, நடுத்தர மற்றும் சிறு நிதிகளின் துணை பொது முகாமையாளராகவும் பணியாற்றுகிறார்.




# கடலில் இருந்து பெறப்பட்ட ஒரு மெட்ரிக் தொன்னுக்கும் அதிகமான பிளாஸ்டிக் கழிவுகள்

ஜோன் கீல்ஸ் குழுமத்தின் சமூக தொழில்முனைவோர் திட்டமான பிளாஸ்டிக்சைக்கிள் மற்றும் த பேர்ல் புரெக்டர்ஸ் (TPP), 2024 ஜனவரி 30 ஆம் திகதி "இலங்கைக்கான தூய்மையான கடற்படுகைகள் பயணம்" உத்தியோகபூர்வ கூட்டாண்மை விழாவை நடத்தியது.

இந்த விழா தெஹிவளையில் உள்ள பலகல வடக்குப் பாறையில் 21வது டைவ்களுடன் ஒழுங்குசெய்யப்பட்டதுடன் "யுனூஜ சான்றளிக்கப்பட்ட தன்னார்வத் தொண்டர்களால் பராமரிக்கப்படும் டைவ்கள் மற்றும் துப்புரவு செயல்முறை, கழிவுகள் சேகரிக்கப்பட்டவுடன் மேற்கொள்ளப்படும் ஆய்வுகள் சேகரிக்கப்பட்ட பிளாஸ்டிக் கழிவுகளுக்காக மேற்கொள்ளப்பட்ட மீள்பாவனை மற்றும் மறுசுழற்சி முயற்சிகள் மற்றும் கூட்டாண்மை மூலம் இதுவரை அடையப்பட்ட நேர்மறையான தாக்கம் ஆகியவை பற்றிய விழிப்புணர்வு அமர்வை அழைப்பாளர்களுக்கு உள்ளடக்கியது.

அழைக்கப்பட்டவர்களில் கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகாரசபை (MEPA), மத்திய சுற்றாடல் அதிகாரசபை (CEA), சுற்றாடல் அமைச்சு மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம் மற்றும் பிளாஸ்டிக்சைக்கிளின் பிற தனியார் துறை பங்குதாரர்களான என்விரோ, கிளீன்டெக், கிளீன் சிட்டீஸ் மற்றும் ப்ளூ ஓஷியன்ஸ் புரோகிரம் (CCBO), ரிசர்ச் ட்ரையங்கள் இன்ஸ்டிடியூட் மற்றும் ஈகோ ஸ்பின்ட்ல்ஸ் ஆகியவற்றின் பிரதிநிதிகள் உள்ளடக்கப்பட்டனர்.



SLAB
SRI LANKA ACCREDITATION BOARD

Certificate of Accreditation

Sri Lanka Accreditation Board for Conformity Assessment
hereby declares that

Nawaloka Laboratories Private Limited
Colombo-02

having being found to comply with the accreditation criteria for medical/clinical laboratories as described in ISO 15189: 2022 has been accredited as a medical laboratory under the field of testing in

Clinical Biochemistry/Chemical Pathology, Clinical Pathology, Microbiology/Serology and Haematology

and has been assigned the accreditation number
ML 046-01

This certificate is issued on 24 October 2023 and is valid until

23 October 2026

The accreditation was granted for the first time on 24 October 2023

The scope and conditions of accreditation are specified in the Schedule of Accreditation bearing the accreditation number appearing in this certificate.

Director/CEO
Sri Lanka Accreditation Board for Conformity Assessment
Colombo, Sri Lanka

ilac-MRA SLAB ACCREDITED

# நவலோக்க ஆய்வகத்திற்கு ISO 15189:2022 சான்றிதழ்

இலங்கையின் சுகாதாரத் துறையில் புகழ்பெற்ற நிறுவனமான நவலோக்க ஆய்வகம், ISO 15189 சான்றிதழின் சமீபத்திய தரவரிசையான ISO 15189:2022 க்கு மேம்படுத்தப்பட்ட இலங்கையின் முதல் ஆய்வகமாக தனது சாதனையை பெருமையுடன் அறிவித்தது.

இலங்கை முழுவதிலும் உள்ள மருத்துவ மற்றும் பரிசோதனை ஆய்வகங்களின் தரங்களைப் பாதுகாப்பதற்கும் பராமரிப்பதற்கும் பொறுப்பான தேசிய அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நிறுவனமாக செயற்படும் இலங்கை தர அங்கீகாரச் சபையால் இந்த சான்றளிக்கப்பட்டது.

இந்த சான்றிதழின் மையத்தில் 87 சோதனைகளின் பரந்த அளவிலான ஒரு வலுவான சோதனை நோக்கம் உள்ளது. இது மருத்துவ உயிர்வேதியியல், இரசாயன நோயியல், நுண்ணுயிரியல், நோய்த்தடுப்பு மற்றும் செரோலஜி போன்ற முக்கிய பகுதிகளை உள்ளடக்கியது.

இந்த சாதனை குறித்து கருத்து தெரிவித்த நவலோக்க ஆய்வக முகாமைத்துவம், இலங்கை தர அங்கீகார சபையினால் ஐளுழு 15189:2022 சான்றிதழைப் பெற்ற முதலாவது ஆய்வுகூடமாக இந்த மைல்கல்லை எட்டியதில் நாங்கள் பெருமையடைகிறோம் என்கிறார்.

# ஐக்கிய அமெரிக்க அபிவிருத்தி நிதி நிறுவனத்தின் உதவியை பெறுவதற்கு IIHS நிறுவனம் தகுதி

இலங்கை சுகாதாரக் கல்வியில் முன்னோடியாக திகழும் International Institute of Health Sciences (IIHS) நிறுவனம் இலங்கை வரலாற்றில் தனித்துவமான தடத்தை பதிக்கும் வகையில் ஐக்கிய அமெரிக்க அபிவிருத்தி நிதி நிறுவனத்துடன் Development Finance Corporation (DFC) ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்றில் கைச்சாத்திட்டுள்ளது.

DFC நிறுவனம் அளிக்கும் நிதி உதவியை பெறுவதற்கான பிரமானங்களை வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ள ஆசியாவின் ஒரே சுகாதார கற்கை நிறுவனம் என்ற வரலாற்றுச் சாதனையை இதன் மூலம் IIHS நிறுவனம் பெற்றுள்ளது.

மேற்படி நிதி IIHS Multiversity கருத்திட்டத்திற்கு பயன்படுத்தப்படவுள்ளதோடு அந் நிதியின் மூலம் IIHS நிறுவனம் தமது புதிய சூழல் நேய, பிரமாண்ட கட்டட வளாகத்தை நிர்மாணிக்கவுள்ளது.

சுகாதார கல்வித் துறைக்குரிய தகைமைகளை பூர்த்தி செய்வதற்கு மாணவர்களுக்கு ஏராளமான வாய்ப்புகளை வழங்குவதோடு சமூக, பொருளாதார மற்றும் சூழல் போன்ற பல்வேறு துறைகளுக்கு ஐஐஉளு நிறுவனம் வழங்கியுள்ள மகத்தான பங்களிப்பே இந் நிதியை பெறுவதற்கான தகுதியை பெறுவதற்கு முக்கிய காரணியாக விளங்கியுள்ளது.

மேற்படி கூட்டிணைவு தொடர்பாக அறிவிக்கும் நிகழ்வு அண்மையில் வத்தளை IIHS நிறுவனத்தில் நடைபெற்றதோடு அந் நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்க தூதுவர் ஜூலி சாங், IIHS நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி சிறப்பு மருத்துவ நிபுணர் கித்சிறி எதிரிசிங்க, நிறுவனத்தின் பணிப்பாளர் உட்பட மாணவ, மாணவியர்களோடு பெற்றோர்களும் கலந்து சிறப்பித்தனர்.



# மக்கள் வங்கிக்கு 50,000 யூடியூப் சந்தாதாரர்கள்



மக்கள் வங்கி தனது யூ டியூப் தளமானது 50,000 சந்தாதாரர்கள் என்ற சாதனை இலக்கினை எட்டியுள்ளமை தொடர்பில் பெருமையுடன் அறிவித்துள்ளதுடன், நாட்டில் எந்தவொரு நிதி நிறுவனமும் கொண்டுள்ள அதிகூடிய எண்ணிக்கையாக இது அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த சாதனை இலக்கினை இலங்கையில் எட்டியுள்ள முதலாவது நிதி நிறுவனம் என்ற வகையில், டிஜிட்டல் வழியிலான ஈடுபாட்டைப் பேணுவதில் தான் கொண்டுள்ள தொடர்ச்சியான அர்ப்பணிப்பையும் மக்கள் வங்கி இதன் மூலமாக நிரூபித்துள்ளது.

வங்கித்துறையில் எதிலும் முன்னோடியாகத் திகழ்வதில் பெயர்பெற்றுள்ள மக்கள் வங்கி, தனது வாடிக்கையாளர்களுடன் இணைப்பில் இருப்பதற்காக முகநூல், இன்ஸ்டாகிராம், டிக்டொக் மற்றும் எக்ஸ் (டுவிட்டர்) அடங்கலாக டிஜிட்டல் தளங்களை தொடர்ச்சியாக உள்வாங்கி வந்துள்ளது.

திறன்மிக்க தொடர்பாடல் மற்றும் வாடிக்கையாளர்களை எட்டுவதில் பல்வகைப்பட்ட சமூக ஊடக தளங்களை உபயோகப்படுத்துவதில் வங்கியின் அர்ப்பணிப்பை யூ டியூப் தளத்தில் அதன் சாதனை நமக்கு அடிக்கோடிட்டுக் காட்டுகின்றது.



# கிளிநொச்சியில் HNB FINANCE இன் புதிய தங்கக் கடன் மத்திய நிலையம்

தங்கக் கடன் தொடர்பில் வடக்கு கிழக்கில் அதிக கேள்விக்கான தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் வகையில் இலங்கையின் முன்னணி நிதி நிறுவனமான HNB FINANCE PLC தனது புதிய தங்கக் கடன் மத்திய நிலையத்தை இல. 8 கனகபுரம் வீதி உதய நகர் கிழக்கு கிளிநொச்சியில் அண்மையில் திறந்து வைத்தது.

பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட HNB FINANCE இன் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான சமிந்த பிரபாதின் தலைமையில் திறந்து வைக்கப்பட்டதுடன் நிறுவனத்தின் சிரேஷ்ட முகாமையாளர்கள் உட்பட பெருமளவிலான மக்கள் இதன்போது கலந்துகொண்டனர்.

கிளிநொச்சி மற்றும் அதனை அண்மித்த பகுதிகளின் தங்கக் கடன் சேவைகளுக்கான தற்போதைய தேவைக்கு தீர்வாக, நிறுவனம் இந்த புதிய HNB FINANCE தங்கக் கடன் மத்திய நிலையத்தை அமைத்துள்ளது.

Gold Loan, Gold Plan மற்றும் VIP Gold Loan சேவைகள் வாடிக்கையாளர்களின் தேவைகளை துல்லியமாகக் கண்டறிந்து, நிதி நிறுவனத்தால் அறிமுகப்படுத்தப்பட்ட சிறந்த தங்கக் கடன் தீர்வுகள் என்று சந்தேகத்திற்கு இடமின்றி கூறலாம்.

SLTMOBITEL The Connection

Duthaya



# Duthayaவுடன் SLT-MOBITEL கைகோர்ப்பு

முன்னணி பிரத்தியேக உதவி app Md Duthaya, தனிநபர்களுக்கு தமது தினசரி செயற்பாடுகளை இலகுவாக முன்னெடுப்பதை உறுதி செய்யும் வகையில் SLT-MOBITEL உடன் கைகோத்துள்ளது.

SLT-MOBITEL வழங்கும் மற்றுமொரு டிஜிட்டல் முன்னெடுப்பாக இது அமைந்துள்ளது. ஹுரவாயலய உடன் பணியாற்றுவதனூடாக, புத்தாக்கமான டிஜிட்டல் சேவைகளை மக்களின் விரல் நுனிகளுக்கு கொண்டு வந்து வாழ்க்கையை எளிமைப்படுத்த தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதன் அர்ப்பணிப்பை SLT-MOBITEL மீள உறுதி செய்துள்ளது.

அத்தியாவசிய ஆவணப்படுத்தல் செயற்பாடுகள் அல்லது விநியோகங்களை நிர்வகித்தல் போன்ற தினசரி செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு உடனடி உதவித் தேவையை கொண்டிருப்பவர்களுக்கும், உள்நாட்டில் சேவைகளிடையே காணப்படும் இடைவெளியை நிவர்த்திக்க ஹுரவாயலய எதிர்பார்த்துள்ளது.

ஒன்லைன் மற்றும் மொபைல் சந்தைப்பகுதிகள் போன்ற உள்நாட்டு சேவைகளுடன் பாவனையாளர்களை இணைப்பதாக ஹுரவாயலய அமைந்துள்ளது. அதனூடாக இன்றைய வேகமாக நகரும் உலகில் நேரத்தை சேமிக்கும் சௌகரியத்துக்கான தீர்வை வழங்குகின்றது.

# Fentons Limited, Hayleys Fentons Limited Mf மாற்றம்





ஒரு நூற்றாண்டு கால பாரம்பரியம் கொண்ட நம்பகமான பொறியியல் சேவை வழங்குநரான Fentons Limited , இலங்கையின் மிகப் பெரிய மற்றும் பல்வகைப்பட்ட கூட்டு நிறுவனமான Hayleys பெயரையும் அடையாளத்தையும் " Hayleys Fentons Limited" என்று சட்டப்பூர்வமாக ஏற்றுக்கொண்டது, அதன் பயணத்தில் ஒரு வரலாற்று மைல்கல்லைக் அடையாளப்படுத்துகிறது.

ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக Hayleys Fentons , ஒரு நம்பகமான பொறியியல் சேவை வழங்குனராகவும், நம்பகத்தன்மை, தரம் மற்றும் சேவைச் சிறப்பிற்காகவும் பெயர் பெற்றுள்ளது

ஒரு வெற்றிகரமான யுக்தியாக உள்ளூர் மற்றும் உலகளவில் சந்தை இருப்பை விரிவுபடுத்துவதற்கும் ஒருங்கிணைந்து, கூட்டு நிபுணத்துவத்தைப் பயன்படுத்துவதற்கும், இரண்டு நிறுவனங்களுக்கிடையிலான தொடர்பு 2016 இல் தொடங்கி Hayleys, Fentons Limited நிறுவனத்தில் 75% பங்குகளை வாங்கியது, அதைத் தொடர்ந்து 2023 இல் 99.98% உரிமையை அதிகரித்தது. அதே ஆண்டில் இலட்சணை (brand) Hayleys Fentons என மாற்றப்பட்டது.

Hayleys Fentons Limited மறுபெயரிடுதல் 11 டிசம்பர் 2023 அன்று சட்டப்பூர்வமாக நடைபெற்றது. 01 ஜனவரி 2024 இலிருந்து இலட்சிணை மாற்றத்துடன் நிறுவனத்தின் அனைத்து நடவடிக்கைகளிலும் Hayleys Fentons Limited ஆக நடைமுறைப்படுத்தப்படும்.

# விளையாட்டுத்துறையை ஊக்குவிக்கும் PLC



இலங்கையின் முன்னணி வங்கியல்லாத நிதிச் சேவை வழங்குனரான பீப்பிள்ஸ் லீசிங் அன்ட் ஃபினான்ஸ் பிஎல்சி [PLC] கிராமப்புற பாடசாலைகளினை சேர்ந்த மாணவர்களை விளையாட்டு துறையில் ஊக்குவிக்கும் வகையில் அமைந்த தனது அண்மைய திட்டத்துடன் தனது சமூகப்பொறுப்பு திட்டத்தை தொடர்ந்து வருகிறது.

மனிக்கின்னை CP/W/A இரத்னாயக்க மத்திய கல்லூரியில் உள்ள விளையாட்டுக் கழகத்தின் விளையாட்டு வீரர்களுக்கு ஸ்பைக்ட் ஓட்ட பந்தயத்துக்குரிய காலணிகளை நன்கொடையாக வழங்குவதும் இத்திட்டத்தில் உள்ளடங்கும்.

அண்மையில் நடைப்பெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் பெண்களுக்கான 800 மீற்றர் தடகள ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்று இலங்கைக்கு பெருமை சேர்த்த சிறந்த வீராங்கனையான திருமதி தருஷி சேனரத்னாவிற்கு PLC வழங்கிய ஆதரவின் விளைவாக இந்த திட்டமானது உருவாக்கம் பெற்றது.

மனிக்கின்னை CP/W/A இரத்னாயக்க மத்திய கல்லூரியின் பழைய மாணவி என்ற வகையில், செல்வி சேனரத்னவின் வெற்றியானது, உயர்சாதனையிலான விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கான பாடசாலையின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகிறது.

உண்மையில், CP/W/A இரத்னாயக்க மத்திய கல்லூரியின் விளையாட்டு வீரர்கள், அகில இலங்கை பாடசாலை போட்டிகளில் வெற்றிகளைப் பெற்று தேசிய மட்ட தடகளப் போட்டி நிகழ்வுகளில் பல பதக்கங்களைப் பெற்றுக் கொண்டு தொடர்ச்சியாக சிறந்து விளங்குகின்றனர்.

# MAGA நிறுவனத்திற்கு Prime குரூப் கௌரவம்



இலங்கையின் பெருமைக்குரிய வாழ்விடப் பகுதிகளின் காரணகர்த்தாவாக அமைந்துள்ள Prime குரூப், அதன் 'The Grand' Ward Place, கொழும்பு 7 அதிசொகுசு வதிவிட நிர்மாணத் திட்டத்தின் பிரதான ஒப்பந்தக்காரரான MAGA என்ஜினியரிங்கை கௌரவித்திருந்தது.

ஒப்பந்தத்தின் நிபந்தனைகளின் உப சரத்தான 11.8 இன் அடிப்படையில், ஒப்பந்தக்காரரினால் சகல ஒப்பந்த ஆவணங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமை, பொறியியலாளரின் திருப்திக்கமைய அனைத்து அம்சங்களும் பரிசோதிக்கப்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டதற்கமைய தக்கவைப்பு கொடுப்பனவை MAGA என்ஜினியரிங் தவிசாளரும் முகாமைத்துவ பணிப்பாளருமான எம்.ஜி.குலரட்னவிடம், Prime குரூப் தவிசாளர் பிறேமலால் பிராஹ்மனகே கையளித்திருந்தார்.

ஒப்பந்த உடன்படிக்கை வெற்றிகரமாக பூர்த்தி செய்யப்பட்டதை தொடர்ந்து, சிறந்த பணி மற்றும் சிறப்புக்கான அர்ப்பணிப்புக்காக MAGA என்ஜினியரிங்கை Prime குரூப் கௌரவித்திருந்தது.

ஆயுபுயு என்ஜினியரிங் ஆற்றியிருந்த பங்களிப்பை Prime குரூப் தவிசாளர் பிறேமலால் பிராஹ்மனகே மற்றும்ீசஅைந லான்ட்ஸ் ரெசிடென்சிஸ் பிஎல்சி தலைமை அதிகாரி சந்தமினி பெரேரா ஆகியோர் பாராட்டி கருத்துத் தெரிவிக்கையில், “The Grand“ ஐ நிர்மாணிப்பதில், ஆயுபுயு நிறுவனத்தின் கடின உழைப்பு, உயர் தர நியமங்கள் மற்றும் நிர்மாணச் செயற்பாடுகளில் காண்பித்திருந்த அர்ப்பணிப்பு ஆகியவற்றுக்காக நாம் நன்றியை தெரிவிக்கின்றோம்.என்றார்.

WWW.PUTHUSUDAR.LK




# இலங்கைக்குள் நுழையும் Socomec India

Low Voltage (LV) மின்சார முகாமைத்துவத்தில் உலகளாவிய முன்னணி நிபுணரான Socomec India நிறுவனம், அதன் முக்கிய விரிவாக்கத் திட்டத்தை வெளியிட்டுள்ளது.

சென்னையை தலைமையகமாகக் கொண்டு செயற்படும் பிரான்சைச் சேர்ந்த வலுசக்தி நிறுவனமான Socomec India, இலங்கை சந்தைக்குள் உடன் அமுலுக்கு வரும் வகையில் நுழைகின்றது.

“Greater India“ என்று அழைக்கப்படும் இந்த மூலோபாய நடவடிக்கையானது, ஒருங்கிணைந்த ஒரு தனியான வணிக நிறுவனமாக அதனை ஒருங்கிணைக்கும் வகையில், Socomec India விற்கு ஒரு குறிப்பிடத்தக்க சாதனையை குறிப்பதோடு, அதன் வணிக மேம்பாட்டுக்கு புதிய வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது.